2005 மார்ச் 9]

128—

ஜரிகை உற்பத்தி ஆலை

***63275—திரு. க. தவமணி:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருபுவனத்திலுள்ள ஜரிகை உற்பத்தி ஆலையை அப்பகுதியிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம், கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) திருபுவனத்தில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஜரிகை ஆலையினை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. (ஆ) வினா எழவில்லை.

திரு. க. தவமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிற்கும், பெண்ணினத்திற்கும் பெருமை சேர்த்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்கள். தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் தொகுதி, திருபுவனத்தில் அரசுக்குச் சொந்தமான ஜரிகை ஆலை ஒன்று உள்ளது. இந்த ஆலையில் மாதந்தோறும் ஆயிரம் முதல் 1,200 மார்க்குகள் ஜரிகை உற்பத்தி ஆகிறது. கும்பகோணம் சரகத்தில் உள்ள 22 பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களில் தற்சமயம் இயங்கி வரும் 15 கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான ஜரிகையின் அளவு 3,000 முதல் 3,500 மார்க்குகள். இந்த அளவினை அடையும் வகையில் மேற்படி ஜரிகை ஆலையின் உற்பத்தி அளவைப் பெருக்குவதற்கு அரசிடம் திட்டம் ஏதேனும் உள்ளதா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஜரிகை ஆலையின் B பகுதி கிளை திருபுவனத்தில் நிறுவப்பட்டு 30-7-1999 முதல் செயல்பட்டு வருகிறது. அரசின் பங்கு மூலதனமாக 20 இலட்சம் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

[2005 மார்ச் 9

இந்த நிதி ஆதாரத்தைக் கொண்டு, இரண்டு தங்கப்பூச்சு இயந்திரங்கள் மற்றும் 4 reeling இயந்திரங்களைக் கொண்டு ஜரிகை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஆலையில் 16 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். தற்போது இந்த ஆலையில் சராசரியாக மாதம் 1,100 மார்க் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. கும்பகோணம் பகுதியிலுள்ள பட்டு நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாதம் சராசரியாக 3,500 மார்க் தேவைப்படுகிறது. திருபுவனம் கிளையில் உற்பத்தி செய்யப்பட்டு வரும் 1,100 மார்க் நீங்கலாக, எஞ்சியுள்ள ஜரிகை மார்க்கினை காஞ்சிபுரம் ஜரிகை ஆலையில் சங்கங்கள் கொள்முதல் செய்து வருகின்றன. திருபுவனம் கிளையில் தற்போது உள்ள இயந்திரங்க்ளைக் கொண்டு 1,500 மார்க் அளவுக்கு உற்பத்தி செய்ய தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தவமணி.

திரு. க. தவமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருபுவனத்தில் மொத்தம் உள்ள பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களில், அந்த ஏரியாவில் மட்டும் 6 சங்கங்கள் உள்ளன. அவை தவிர அந்தச் சரகத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியுள்ளபடி 3,500 மார்க்குகள் தேவைப்படுகிறது. அதேநேரத்தில் திருபுவனத்தில் உள்ள ஜரிகை ஆலையின் உற்பத்தி அளவு தற்சமயம் 1,100 மார்க் என்பதை மாண்புமிகு அமைச்சர் தெரிவித்திருக்கிறார்கள். இந்த நிலையில் மேற்படி ஆலையில் காலை எட்டரை மணி முதல் மாலை 5 மணி வரை ஒரு shift வேலை செய்கிறார்கள். இதை இன்னொரு shift ஆக உயர்த்தினால் ஒரளவு அங்கே பட்டுக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான ஜரிகை அளவை அடையும் வகையில் ஈடுசெய்ய முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்லியதுபோல, இப்போது அங்கே இருக்கக்கூடிய ஜரிகை ஆலையில் 1,100 மார்க் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. மேலும், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய நெசவாளர் சங்கங்களுக்கு மாதம் ஒன்றுக்கு சராசரி 3,500 மார்க் தேவைப்படுகிறது. இப்போது அந்த ஆலையில் 1,500 மார்க் வரக்கூடிய அளவுக்கு உற்பத்தியை மேம்படுத்துவதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து அமைகிறேன்.

2005 மார்ச் 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆறுமுகம்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர் அவர்களின் பதில் முடிகிறவரை கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. கே. ஆறுமுகம்.

திரு. கே. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பட்டு உற்பத்திக்கான ஜரிகைகள் பெரும்பாலும் சூரத் நகரிலேயிருந்துதான் பெறப்படுகின்றன என்ற கருத்து இருக்கிறது. தமிழகத்தினுடைய நெசவாளர்களின் நலன் கருதி, தமிழகத்திலே உள்ள அத்தனை பட்டு உற்பத்திச் சங்கங்களுக்கும் தமிழ்நாட்டிலேயே ஜரிகை உற்பத்தி செய்துகொடுக்கக்கூடிய அளவிலே, மிகப்பெரிய அளவிலே தொழிற்சாலை அமைக்க அரசு முன் வருமா என தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாதம் ஒன்றுக்கு சராசரி 15,000 ஜரிகை மார்க்குகள் தேவைப்படுகின்றன. அதிலே தஞ்சாவூரிலே இருக்கக்கூடிய ஜரிகை ஆலையிலே 1,100 மார்க்குகள் மாதந்தோறும் தயார் செய்யப்படுகின்றன. அதேபோல, காஞ்சிபுரத்திலே இருக்கக்கூடிய ஜரிகை ஆலையிலே மாதம் ஒன்றுக்கு 8,000 மார்க்குகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த 9,000 ஜரிகை மார்க்குகள் போக மீதி இருக்கக்கூடியதுதான் சூரத்திலேயிருந்து வரவழைக்கப்படுகிறது. மேலும், இந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]